பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 08 2024 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பணிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சுதந்திரத்திற்கான போராட்டங்கள் தீவிரமடையும் காலத்திற்கு முன்பாகவே ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் தீரன் சின்னமலை என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

3. காவிரி கரையோரப்பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தில் ஆடிப்பெருக்கு விழா இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

5. பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கி காலிறுதிப் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

---- இனி விரிவான செய்திகள் --

**<<<<<<<>>>>>**

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு வேளாண் துறையில் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வேளாண் பொருளாதார நிபுணர்கள் பங்கேற்றுள்ள சர்வதேச மாநாட்டை இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பணிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இயற்கை வேளாண்மைக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நீடித்த வேளாண் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு பருவநிலைக்கும் உகந்த, தொள்ளாயிரம் புதிய பயிர் ரகங்கள் கடந்த பத்தாண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

வேளாண் துறையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகை நேரடியாக அவர்களின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படுவதாகவும் பிரதமர் கூறினார்.

இதன்மூலம், பத்து கோடி விவசாயிகளுக்கு ஒரே நேரத்தில் வருவாய் ஆதரவுத்தொகை அவர்களின் வங்கிக்கணக்கில் ஒரு நொடியில் சேர்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுதானியங்கள், பால், பயிர் வகைகள் மற்றும் நறுமணப் பொருட்கள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார கொள்கையின் மையமாக வேளாண் துறை உள்ளது என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<<>>>>>

சுற்றுலாத்துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

சர்வதேச விருந்தோம்பல் கண்காட்சியை இன்று நொய்டாவில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியாவை உருவாக்குவதில் சுற்றுலாத்துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவாத் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை சேர்ந்த 56 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கும் மேற்பட்ட இடங்களை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்க வகை செய்யும் புதிய வரைவு அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இதன்படி, மகாராஷ்ட்ரா, கோவா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாட்டிற்கு உட்பட்ட பகுதிகள் இந்த அறிவிக்கையில் இடம்பெற்றுள்ளன.

இதுகுறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களை 60 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மணடலங்கள் என்று அறிவிக்கப்படுவதன் மூலம் அப்பகுதிகளில் சுரங்கப்பணிகள், குவாரிப்பணிகள் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

உச்சநீதிமன்றத்தின் 75-ஆவது ஆண்டு கொண்டாட்டங்களையொட்டி நடைபெற்றுவரும் மக்கள் நீதிமன்றங்கள், இன்று நிறைவடைகின்றன.

இதனையொட்டி தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால், நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு சமரச முறையில் தீர்வுகாணும் வகையில் இந்த மக்கள் நீதிமன்றங்கள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மக்கள் நீதிமன்றங்கள் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

<<<<<<<>>>>>

கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாட்டில் நிவாரணம் மற்றும் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ராணு வம், தேசிய பேரிடர் மீட்புப்படையினர் இப்பணிகளை மேலும் விரிவுபடுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநில அரசின் கோரிக்கையை ஏற்று கூடுதல் கருவிகள் தில்லியில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்களை கண்டறிந்து மீட்பதற்கு இந்த கருவிகள் உதவிடும் என்று ராணுவம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளதாக கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் 93 நிவாரண முகாம்களில தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உயிரிழந்தவர்களில் 148 பேரின் உடல்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் திரு பினராயி விஜயன் தெரிவித்தார்.

இந்நிலையில், இமாச்சலப்பிரதேசத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

சில இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<<<<<<<>>>>>

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி, மத்தியில் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நேரு காலத்தில் தொடங்கி, மன்மோகன் சிங் காலம் வரை காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியதாக குறிப்பிட்டார்.

கர்நாடகாவில் தற்போது ஆட்சிப்பொறுப்பில் உள்ள திரு சித்தராமையா இதனை தொடர்வதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

சுதந்திரப்போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நினைவு தினம் இன்று அனுரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், இந்தியாவில் வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் ஆதிக்கத்தை அன்றைய காலக்கட்டத்தில் துணிச்சலுடன் எதிர்கொண்ட மாவீரர் தீரன் சின்னமலை என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டின் சுதந்திரத்திற்கான போராட்டங்கள் தீவிரமடையும் காலத்திற்கு முன்பாகவே ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் தீரன் சின்னமலை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரத்து 800-ஆம் ஆண்டுகளில், ஈரோடு மற்றும் அரச்சலூர் பகுதிகளில் ஆங்கிலேயப்படைகளுக்கு எதிராக போர் புரிந்து வெற்றிகண்டவர் தீரன் சின்னமலை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தாகத்துடன் நாட்டிற்காக இன்னுயிர் நீத்த பல்லாயிரக்கணக்கான தியாகிகளுக்கு முன்னோடியாக வாழ்ந்து மறைந்தவர் மாவீரர் தீரன்சின்னமலை என்றும், அவரது வீர வரலாற்றை போற்றி வணங்கிடுவோம் என்றும் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, ஈரோடு மாவட்டம் ஓடாநிலைப்பகுதியில் உள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாநில அமைச்சர் திரு முத்துசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் காவிரி கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நேற்று மட்டும் 37 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் எண்ணிக்கையை 50-ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வெள்ள நிலவரத்தை பொறுத்து இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவ முகாம்களில் சளி, காய்ச்சல், உயர் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவு பரிசோதனை செய்யப்பட்டு தேவைக்கேற்ப மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுவதாகவும் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

சத்தீஸ்கரில் ஆயுதம் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் தொடர்புடைய இரண்டு நக்சலைட்டுகளுக்கு எதிராக தேசிய புலனாய்வு முகமை குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது.

ஜக்தல்பூர் சிறப்பு நீதிமன்றத்தில் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதுகாப்புப்படையினர் மீது தாக்குதல் நடத்த இருவரும் சதித்திட்டம் தீட்டியதாக அந்த குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் ஆடிப்பெருக்கு விழா இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

தஞ்சாவூரில் வழக்கமான உற்சாகத்துடன் இந்த விழா கொண்டாடப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - நந்தகோபால் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

தேசிய உடல் உறுப்பு தான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கி போட்டிக்கான காலிறுதி ஆட்டங்களில் பங்கேற்கும் அணிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

நாளை நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டங்களில், இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இதர காலிறுதி ஆட்டங்களில், பெல்ஜியம் - ஸ்பெயினையும், நெதர்லாந்து – ஆஸ்திரேலியாவையும், ஜெர்மனி – அர்ஜென்டினாவை-யும் எதிர்கொள்கின்றன.

அரையிறுதி ஆட்டங்கள் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

தங்கம் மற்றும் வெண்கலப்பதக்கத்திற்கான போட்டி வரும் எட்டாம் தேதி நடைபெறவுள்ளது.

---------------

மகளிர் 25 மீட்டர் துப்பாக்கிச்சுடும் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் மனு பாக்கர் பங்கேற்கிறார்.

இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ளது.

வில்வித்தை போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் தீபிகா குமாரி மற்றும் பஜன்கவுர் பங்கேற்கின்றனர்.

------------

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கான பதக்கப்பட்டியலில் இதுவரை 13 தங்கம் உட்பட 31 பதக்கங்களுடன் சீனா முதலிடத்திலும், 11 தங்கம் உட்பட 36 பதக்கங்களுடன் பிரான்ஸ் இரண்டாவது இடத்திலும், 11 தங்கம் உட்பட 22 பதக்கங்களுடன் ஆஸ்திரேலியா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இந்தியா மூன்று வெண்கலப்பதக்கங்களுடன் 47-ஆவது இடத்தில் உள்ளது.

-----------------

போர்ச்சுக்கல்லில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - இங்கிலாந்தின் **Joshua Paris** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.